பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 07 வியாழக்கிழமை 24.08.2023 கதிர் 286

## பொலிஸ் காவலரை கடித்த கனேடியர்களுக்கு மறியல்

### கசூரினா கடற்கரையில் வினோத சம்பவம்

(ந.லோகதயாளன்.)

காரைநகர் கடற்கரையில் நீராடிய 10 கனேடியர்கள் பொலிஸ் காவலரைக் கடித்த குற்றச்சாட்டில்கைது செய்யப்பட்டு நீதிமன்றில்நிறுத்தப்பட்டசமயம், 6 ஆண்களையும்விளக்கமறியலில் வைத்தநீதிமன்றம்4பெண்களைப் பிணையில்செல்லஅனுமதித்தது.

காரைநகர் கசூனாபீச் கடற் கரையில் கடந்த திங்கள் கிழமை கனேடியக் குடி உரிமை பெற்ற இலங்கையர்கள் 10 பேர் நீராடியுள்ளனர். அப்போது ஒருவரின் கை விரலில் இருந்த தங்க மோதிரம் கடலில் தவறி வீழ்ந்துள்ளது. கடற்கரையில் பணியில் இருந்த பொலசாரிடம் அதனை மீட்டுத் தருமாறு கோரி யுள்ளனர்.

அதனை மீட்கும் அளவிறகு தமக்குப்பணிஅனுபவம்கிடையாது என பொலிசார் கூறியதனால் ஏறபட்ட தர்க்கத்தின்போது இரு தரப்பினருக்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அப்போது ஒருவர் பொலிஸ் காவலரை வாயால் கடித்தார் என்று குற்றஞ்சாட் டப்படுகின்றது. இதனால் அவர்கள் 10 பேரையும்

☞2

## பழியைத் தூக்கி அதிகாரி மீது போட்டார் அமைச்சர் பந்துல

நாட்டை தற்போதைய இக்கட்டான நிலைமைக்கு கொண்டு வந்தமைக்காக ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி ஜயசுந்தர பொறுப்புக்கூறவேண்டுமென நெடுஞ்சாலைகள்அபிவிருத்தி போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர்அங்குமேலும்தெரிவித் ததாவது:

பொருளாதார நெருக் கடிக்குத்தீர்வு காண்பதற்காக கடுமையான வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. வாழ்க் கைச் செலவுகள் அதிகரித் துள்ளது என எதிர்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மடுவில் ஆற்றிய உரை ரெலோவினதும் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனதும் உண்மை முகத்தை மட்டுமன்றி தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இரட்டை வேடத்தையும் அம்பலப்படுத்தி நிற்பது குறித்து நேற்று உங்களுடன் பகிர்ந்த கொண்டிருந்தேன்.

அது ரணிலால் வடக்கில் ஏற்பட்ட குழப்பம். ரணில் எங்கு போனாலும் குட்டையைக் குழப்பி மீன்பிடிக்கும் வழக்கத்தைத் கொண்டவர்தானே! அவர் மடுவுக்கு வந்தது கத்தோலிக்க திருச்சபைக்குள் பெரும் சலசலப்பையும் குழப்பதையும் ஏற்படுத்தியுள்ளது. திருச்சயையும்உடைத்துப் பிளப்பதற்கு ரணிலும் சில பாதிரியார்களும் சதித் திட்டம் தீட்டுகிறார்களோ என்று சந்தேகப்படுமளவிற்கு அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது ரணிலின் மடுப் பயணம். அது பற்றித்தான் இன்றைக்கு உங்களுக்குச் சொல்லப் போகின்றேன்.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக இலங்கையின் பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அரசியல் தலைவர்கள் எவரையும் சந்திப்பதில்லை.

☞2

# 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு

## மீண்டும் வலியுறுத்தியது இந்தியா





இலங்கையின் பல் இன, மொழி, மத அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான இந்தியாவின் ஆதரவு தொடரும். ஐக்கிய மற்றும் வளமான இலங்கையின் கட்டமைப்பிற்குள் சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதை ஆகியவற்றுடன் தமிழ்ச் சமூகத்தின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்யும் நல்லிணக்க செயல்முறை அவசியம். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு செய்யப்படவேண்டும். அதற்காக மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான உதவிகளையும் வழங்க தயாராகவுள்ளோம்.

இவ்வாறு இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெயசங்கர் தெரிவித்தார்.

இந்தியா-இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் கூட்டம்நேற்றுநாடாளுமன்றகுழு அறையில்இந்தியஉயர்ஆணையர் கோபால் பாக்லே, சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்த்தன,

☞2

## காலநிலை மாற்றத்துக்கு ஈடுகொடுக்க விரைவில் ஆலோசனைக்குழு நியமனம்

காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான இலங்கையின் மூலோபாய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளை உள்ளடக்கிய தேசிய ஆலோசணைக் குழுவொன்றை நிறுவவுள்ளதோடு ஆறுமாதங்களுக்குஒருமுறை கூடி செயற்பாடுகள் பற்றி ஆராய்வதெனவும்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

காலநிலை மற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான இலங்கையின் முன்னேற்பாடுகள்தொடர்பில்ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மீளாய்வு கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைஅறிவித்தார்.

☞2

## அரசினது தவறான வரி விதிப்பே வல்லுநர்கள் வெளியேறக் காரணம்

### அமெ. தூதரிடம் அவைத் தலைவர் சி.வி.கே. தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

அரசின் தவறான வரி விதிப்பே வைத்தியர்கள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள் போன்ற துறைசார் நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறக் காரணம் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்கிடம் வடக்கு மாகாணஅவைத்தலைவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின்சிரேஸ்டதுணைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் நேற்று தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள்

☞2

## ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க மேலும் 8000 பேருக்கு நியமனம்

பாடசாலைகளில்நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஏற்கனவே8000ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 5500 பட்டதாரி ஆசிரியர்களும், 2500 இரண்டாம் மொழி ஆசிரியர்களும்இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்தபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் கல்வி அமைச்சர் என்ற வகையில் கல்வித் துறையின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தி வருகிறார். கல்வித் துறையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறு, எமது மாணவர்களைத் தயார்ப்படுத்தவேண்டியது அவசியமாகும். அதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, கணிதவியல் உள்ளிட்ட பாட விடயதானங்களை உள்ளடக்கிய வகையில் ஸ்டெம் (STEAM) என்ற தொனிப்பொருளில் எதிர் காலத்தில் கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

க.பொ.த சாதாரண தர மற்றும்உயர்தரப்பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் பெறுபேறுகள்

☞2

## சிக்கனமாகத் தண்ணீரை பயன்படுத்த வலியுறுத்து

கடும் வறட்சி நிலவும் தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு யாழ். குடாநாட்டு மக்கள் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிபாலசுந்தரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணமாவட்டத்தில் நிலவும் வறட்சி தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலைமையின்படி 22,000 குடும்பங்கள் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அதில் சுமார் 8,000 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டைஎதிர்நோக்கிக்கொண் டிருக்கின்றார்கள்

நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை அல்லது மிக வரட்சியான நிலைமை காணப்படுகின்றது.

இந்தப் பகுதிகளுக்கு பேரிடர்முகாமைத்துவசேவை நிலையத்தின் ஊடாக, அந்தத் திணைக்களத்தினுடைய அனுசரணையுடன் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இந்த நிலைமை நீடிக்குமாக இருந்தால் சில வேலைகளில் இன்னும் உதவிகள் தேவைப்படும். இதற்கு ஏற்றாற் போல் விரைவில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களை அழைத்து பேரிடர் முகாமைத்துவக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகள் சம்பந்தமாகவும், வரட்சியி ன்

☞2

## தடுப்புக் காவலில் ஒருவர் இறப்பு திருமலை ஜமாலியாவில் பதற்றம்

### வீதிகளில் டயர்கள் எரிப்பு

திருகோணமலையில் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தமையை அடுத்து ஜமாலியா பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. நேற்றிரவு அந்தப் பகுதியில் டயர்கள் எரிக்கப்பட்டு பொலிஸாருக்கு எதிர்ப்பு வெளியிட்டப்பட்டது.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்துகொண்டார் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே ஜமாலியா பகுதியில் அசம்பாவிதங்கள் தொடங்கின. பதற்றம் ஏற்பட்டது.

நேற்று மாலை 4.50 மணியளவில் சந்தேகநபர் தற்கொலை செய்துகொண்டார் என்று அவரது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் திருகோணமலை-ஜமாலியா, தக்வா நகரை சேர்ந்தவர். அவருக்கு வயது 26.

ஜமாலியா- கடற்கரை பகுதியில் 21ஆம் திகதி

☞2

காலைக்கதிர் Kalaikkathir

# பேரினவாதத்தின் அதி தீவிர முகவர்கள் மீண்டும் இனக் கலவரத்திற்கு திட்டமா?

## சந்தேகம் எழுப்புகிறது மக்கள் முன்னணி

சிங்கள பௌத்த பேரினவாதத்தினுடைய அதிதீவிர முகவர்களாக இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, உதய கம்பன்பில, விமல்வீரவன்ஸ, மேர்வின் சில்வா ஆகியோர் சேர்ந்து மீண்டும் ஓர் இனக் கலவரத்திற்கு திட்டமிட்டு இருக்கிறார்களா என்ற நியாயமான சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுசெய்தியாளர்களைச்சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்திலேயேஆளும் தரப்பைபிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, முல்லைதீவு மாவட்ட நீதிபதியைக் கடும் வார்த்தைகளால் விழித்து வன்மத்தை காக்கியிருக்கின்றார்.

இது நாகரீக மனித குலத்தினாலும்,ஜனநாயகசமூகத்தினாலும் எந்தவகையிலும்ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு விடயம். இதனைத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிப்பதுடன், சரத் வீரசேகரவுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவருடைய காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் தடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

சரத் வீரசேகரவின் கருத்துக்கள் தற்செயலாக முன்வைக்கப்படுகின்றவையாகத் தெரியவில்லை.

இந்த வாரத்தில் மாத்திரம் மேர்வின் சில்வா, தமிழர்களின் தலைகளை கொய்வேன் என்று கூறுகின்றார், சரத் வீரசேகர முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை மோசமான வார்த்தையால் விமர்சிக்கிறார், உதய கம்மன்பில கஜேந்திரகுமார்பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள வீட்டிற்கு முன்பாகப்போராட்டம்நடத்துவேன் என்று தெரிவித்திருக்கின்றனர்.

இவர்களுடையகருத்துக்களை நாங்கள் தொகுத்து நோக்குகின்ற பொழுது, இந்த சிங்கள பௌத்த பேரினவாதத்தினுடைய அதிதீவிர முகவர்களாக இருக்கக்கூடிய இவர்கள் அனைவரும் சேர்ந்து மீண்டும் ஓர் இனக் கலவரத்திற்கு திட்டமிட்டு இருக்கிறார்களா என்ற நியாயமான சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது.

சரிந்துகிடக்கின்றசிங்களபௌத்த வாக்கு வங்கியை கட்டி எழுப்பி, தங்களுடைய அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், தமிழர்களைத் திட்டமிட்ட வகையில் கட்டமைக்கப்பட்ட ரீதியில் இனவழிப்புசெய்வதற்கான தமது பொறிமுறையை தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும், மீண்டும் ஓர் இன அழிப்பிற்கு ஒரு இனக் கலவரத்திற்கு இவர்கள் வித்திடுகின்றார்களாஎன்றுசந்தேகம் எங்களுக்கு எழுந்து நிற்கின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியும்,தமிழ்அமைப்புகளும், சிவில் அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை போல இலங்கையிலே நடைபெற்ற இனவழிப்பிற்கு, தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலைக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்ளகப் பொறிமுறை ஊடாக ஓர் உலக விசாரணையின் ஊடாக நீதி கிடைக்கப் பெறமாட்டாது என்ற விடயத்தை சரத் வீரசேகரவின் கருத்துக்கள் மீளவும் ஒரு தடவை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

சிங்களபௌத்தபேரினவாதமும், ஆட்சியாளர்களும், தாங்கள் விரும்புகின்ற தீர்வுகளையும் கருத்துகளையும் தான் இலங்கையில் இருக்கின்றநீதிமன்றங்கள்கொடுக்க வேண்டும்என்றுவிரும்புகின்றார்கள், ஆணையிடுகின்றார்கள்.

அத்தோடு தங்களுடைய கருத்துக்கு, தங்களுடைய நிலைப்பாடுகளுக்கு மாறாக உண்மையை உரைக்கின்ற எந்த ஒரு தீர்ப்பையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவது கிடையாது. அவ்வாறு தீர்ப்பை வழங்குகின்றவர்களை மனநோயாளிகள் என்ற வரையறைக்குள் கொண்டு வந்து அவர்களுக்கு எதிராகத்தான் இந்த சிங்கள பௌத்த பேரினவாதம்நடவடிக்கைஎடுக்குமே தவிர,பாதிக்கப்பட்டதமிழ்மக்களுக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீதியோ தீர்வோ வழங்கப்பட மாட்டாது என்பது இந்தக்கருத்தின் ஊடாக மீள ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும்உள்ளாகவிசாரணை ஊடாக ஒரு தீர்வு கிடைக்கப் பெற மாட்டாது என்பதையும் இந்தச் சம்பவம் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தி இருக்கின்றது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம் - என்றார்.

### இனி இது .....

கொள்கைமுடிவாகவே அவர் அரசியல் தலைவர்களின் சந்திப்புக்களைப் புறக்கணித்து வருகின்றார். 'அரகலய' போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது அவர் இந்தக் கொள்கை முடிவைஎடுத்தார். அதற்கொரு காரணம் இருந்தது.

உயிர்த்தஞாயிறுதாக்குதல் நடப்பதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மீது இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் இந்த அரசியல் தலைவர்களால் எடுக்கப்படவில்லை என்கிற கோபமே கர்தினாலை இந்த முடிவை எடுக்க வைத்தது. அவரது முடிவு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பெரிதும் பாதித்தது. கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது கர்தினாலை நேரில் சந்தித்துப் பேசப் பல தடவைகள் முயற்சி செய்தார். ஆனால்கர்த்தினால் மறுத்துவிட்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவியைவிட்டு வெளியேறி ரணில்விக்கிரமசிங்க அந்தப் பதவியில் வந்து அமர்ந்த பின்னரும் கர்தினால் தனது கொள்ளை முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. புதிய ஜனாதிபதி பதவியேற் றால் மகாநாயக்கர்களையும் பேராயரையும் சந்திப்பது வழமை என்றபோதும் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அதற்கு இடம்கொடுக்கவில்லை.

கோட்டாபய பதவிக்கு வந்த பின்னரும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய - அந்தத் தாக்குதலுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய-தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இதுவே கர்த்தினாலின் கோபத்துக்குக் காரணம். ஆனால், ரணிலோ அந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டார் என்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவே குற்றஞ்சாட்டியிருந்தது. தாக்குதல் நடந்தபோது ரணில் நாட்டின் பிரதமராக இருந்தார். அதனால் கர்தினாலுக்கு ரணில் மீது நம்பிக்கையில்லை.

இதனால் கர்தினாலைச் சந்திக்கரணில்மேற்கொண்ட முயற்சிகள்எல்லாமும்தோல்வியடைந்தன. அதனால் வழக்கம் போலவே கர்தினாலைத்தவிர்த்துவிட்டுமற்றைய ஆயர்களை நேரடியாகச் சந்தித்துப் பேசத் தொடங்கினார். அவர் ஜனாதிபதியானதுமே குருநாகல் ஆயர் ஹரோல்ட் அந்தனி பெரேராவைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு 2022 ஒக்டோபரில் நடந்தது. பின்னர் 2023 மே மாதம் ஆயர்வலன்ஸ்மென்டிஸைச் சந்தித்துப் பேசினார்.

அதற்குமுன்னதாகஅரகலய போராட்டத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்த கத்தோலிக்க சமூகத்தை ரணில் மிக மோசமாக அடக்கி ஒடுக்கியிருந்தார். போராட்டத்தில்முனைப்புடன் பங்காற்றி வந்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் கைது செய்யப்பட்டார். கத்தோலிக்க ஊடகச் செயற்பட்டாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். அரசியல் தலைவர்களைச் சந்திப்பதில்லை என்கிற கர்தினாலின் பிடிவாதம் தொடர்வதற்கு இதுவும் ஒரு காரணம்.

அப்படியிருந்தும் கர்தினாலைத் தாண்டி ஏனைய ஆயர்கள் மூலமாக ரணில் கத்தோலிக்கத் திருச்சபைக்குள்தனதுசெல்வாக்கை நிலை நிறுத்த முயன்றார். அதில் வெற்றியும் கண்டார். கர்தினாலைத் தாண்டி ஆயர்கள் ஹரோல்ட் மற்றும் வலன்ஸ் மென்டிஸ் ஆகியோருடன் ரணில் தனது தொடர்புகளையும் உறவுகளையும் பலப்படுத்தியதைத்தொடர்ந்து, அவர்கள் மூலமாகப் பாப்பரசரின் கொழும்புக்கான பிரதிநிதி கர்தினால் பிறையன் உடக்குவேயுடனும் நெருக்கத்தை வளர்த்துக் கொண்டார் ரணில்.

இந்தப் பாப்பரசரின் பிரதிநிதிதான் ரணில் விக்கிரமசிங்கவை மடுத் திருத்தல திருவிழாவிற்கு அழைத்தவர். அதுமட்டுமல்ல மடுவில்அரசியல்உரையை ரணில் ஆற்றுவதற்கும் அனுமதியளித்தவர். ரணிலின் இந்த அரசியல் பேச்சு கத்தோலிக்கச் சமூகத்தின் கடுமையான கண்டனங்களுக்கு ஆளானது. கத்தோலிக்கத் திருச்சபையின் பத்திரிக்கை ரணிலின் இந்த அரசியல் உரையைக் கடுமையாக விமர்சித்தது. இதற்கு முன்னர் ஒருபோதும் தேவாலயங்கள் அரசியல் பரப்புரைகளுக்காக ஒதுக்கப்பட்டதில்லை. இதுதான் முதற்றடவை.

இலங்கைக்கு புதிய பேராயர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார். ரணில் மற்றும் பிறையனுடன் ஒத்துப் போகக்கூடிய ஒரு ஆயர்தான் புதிய பேராயராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முதல் தடவையாக அவர் ஒரு பெரும்பான்மையினத் தவராக இல்லாமல் இருப்பதற்கான வாய்ப்புகளும் உண்டு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

### 13ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய-இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவர் அனுர பிரியார்த்தன யாப்பா ஆகியோரின் தலைமையில் 50இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் பங்கேற்பில் நடைபெற்றது.

இதன்போது, இந்திய அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மெய்நிகர் வழியில் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

புவியியல் ரீதியாக மிக நெருக்கமானஅமைவிடத்தை இந்திய, இலங்கை நாடுகள் கொண்டிருக்கின்றன. இதனால் இலங்கையின் வளர்ச்சி, உறுதிப்பாடுமற்றும் செழுமைக்கு இந்தியாவின் நேர்மறையான பங்களிப்பு கிடைக்கிறது,

கடந்த வருடத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதாரச்சவால்களுக்கு இந்தியாவின் விரைவான மற்றும் கணிசமான உதவி மற்றும் ஒத்துழைப்பு கிட்டியது. இது, 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற இந்தியாவின் கொள்கைக்கான உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

சர்வதேச நிறுவனங்கள் மற்றும் இருதரப்பு பங்காளிகளின் உதவிகளுக்கு அப்பால் இந்தியாவால் வழங்கப்பட்ட சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி இதில் மிகவும் முக்கியமானதாகின்றது.

நீண்ட கால மற்றும் நிலையான தீர்வுகளை ஏற்படுத்துவதற்காக இந்தியாவின் பங்களிப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதோடு, மின்கட்டமைப்பு இணைப்பு மற்றும் பெற்றோலிய குழாய் வழி இணைப்பு ஆகியன இலங்கையின் ஆற்றல் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான கூட்டு முயற்சிகளாக முன்னெடுக்கப்படவுள்ளன. பரஸ்பர நன்மைக்காக திருகோணமலை பொருளாதார மையம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையம் என்பன பிராந்திய பொருளாதார நடவடிக்கைகளுக்குமுக்கியமாகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான வளமான எதிர்காலத்திற்கான திறவுகோலாக கடல், விமானம், எரிசக்தி, வர்த்தகம், முதலீடு மற்றும் டிஜிட்டல் உறவுகள் போன்றபல்வேறுகளங்களில் வாய்ப்புக்கள் உள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சமீபத்திய இந்தியப் பயணமானது, இரு தலைவர்களுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் மக்களிடையேயான தொடர்பை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை வலுப்படுத்துவதாக இருந்தது. இது இரு நாடுகளுக்கு இடையிலானஒத்துழைப்பின் பகிரப்பட்ட தன்மையை வெளிப்படுத்தியது.

இந்தியாவின்பிராந்தியத்தில் உள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கான, கண்ணோட்டத்தையும் அதன் வெளிப்பாட்டையும்கொழும்பு பாதுகாப்புமாநாடு(றீபுறூபயூ), இந்திய கடற்கரையோர நாடுகள் (IORA) மற்றும் பிம்ஸ்ரிக் (BIASTEC) போன்றமன்றங்கள்காணப்படுகின்றன - என்றார்.

### காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து நடவடிக்கைளின்போதும் நிதி முக்கிய காரணியாகக் காணப்படுகிறது., காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு உகந்த வகையில் வலுவான பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், காலநிலை மாற்றங்களை வெற்றிகொள்வதற்காக சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்கிச் செயற்பட வேண்டியதும்அவசியமாகும். மேலும்,இலங்கையில்நிறுவப்படவிருக்கும் காலநிலை மாற்றம் தொடர்பிலான சர்வதேச பல்கலைக் கழகத்தை சர்வதேச ஆய்வுக்கான கேந்திர நிலையமாக நடத்திச் செல்லும் அதேநேரம் காலநிலைப் பேரிடர்களை மட்டுப்படுத்தவது தொடர்பிலான இலங்கையின் அர்ப்பணிப்பை அதனூடாக அடையாளப்படுத்தவேண்டும் என்றார்.

இதேவேளை, காலநிலை மாற்றங்கள் தொடர்பிலானஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் ருவன் விஜேவர்தன கருத்து தெரிவிக்கையில், காலநிலை மாற்றம் தொடர்பிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை இலங்கையில் நிறுவுவது குறித்து கேம்பிரிஜ் உள்ளிட்ட உலகின்முன்னணி பல்கலைக்கழங்களுடன் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் நாட்களில்நடைபெறவிருக்கும் காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான மாநாட்டில் முன்மொழியப்படவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

### அரசினது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலரை யாழ்ப்பாணம் - கொக்குவிலில்அமைந்துள்ள தனியார் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம்சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கைதமிழரசு கட்சியின் மூத்த துணைத்தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கில் தற்போதுள்ள அரசியல் நிலைமைகள் தொடர்பில்அமெரிக்கதூதுவர் கேட்டுஅறிந்துகொண்டதுடன் தமிழ் மக்கள் தற்பொழுது அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பிலும் அரசியல் தலைவர்களினால் அமெரிக்க தூதுவருக்கு விளக்கப்பட்டது.

பௌத்தமயமாக்கல், காணி அபகரிப்பு என்பன பற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. குறுந்தூர் மலை பிரச்சிணையானது வேண்டுமென்றே இனப்பிரச்சணையை தோற்றிவிக்கும் முயற்சி என நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

இதேநேரம் அரசின் பிழையான வரிவிதிப்பே வைத்தியர்கள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள் போன்ற துறைசார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேற காரணம். இந்த வரி விதிப்பால் கல்வியும், சுகாதாரமும் முழுமையாக பாதிக்கப்படுகின்றது, இதற்கு அரசு வேறு மார்க்கத்தை கையாள வேண்டும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டினார்.

மாற்று வழி என்ன என அமெரிக்கத் தூதுவர் வினாவினார்.

அதற்கு நேரடியாகப் பதிலளிக்காத தமிழ்த் தலைவர்கள் அரசின் முடிவால் வரி செலுத்தக்கூடியவர்கள் வெளியேறுவதால் ஆளும் தரப்பு எதிர்பார்க்கும் வருமானம் கிடைக்கப்போவதில்லை என்பதால் இது இழப்பே தவிர சாதகமான நடவடிக்கையல்ல என்று தெரிவித்துள்ளனர்.

### ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும்வரை மாணவர்கள்தமதுநேரத்தைவீணாக்க் கழிப்பதைத் தவிர்க்கும் வகையில், அவர்களுக்கு ஆங்கிலம், தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சிகளுடன் கூடிய பாடநெறிகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். இது மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும்.

பாடசாலைகளில்நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய,அண்மையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கவும் மேலும் இரண்டாம் மொழி ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கும் அவசியமானபணிகள்முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ஏற்கனவே சுமார் 8,000 பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், எதிர்காலத்தில்மேலும்5,500 பட்டதாரிகள், ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ளப்படுவார்கள். மேலும், 2,500 இரண்டாம் மொழி ஆசிரியர்களும்நியமிக்கப்பட உள்ளனர்.

நாடு முழுவதும் நிலவும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக் கு விரைவாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க அவசியமானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

### 11 ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக தொழில் இழந்துள்ளோர் தொடர்பிலும்விவரங்களை சேகரித்து அவர்களுக்கு ஏதாவது உதவிகளைஅரசுநிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கின்றோம்.

தற்போதுள்ள வரட்சியான சூழ்நிலை காரணமாக விவசாயி கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகளிடமிருந்து தனிப்பட்ட ரீதியாக விண்ணப்பங்கள் எதுவும் வரவில்லை.எனினும்விவசாயம்பெருமளவில்பாதிக்கப்பட்டுள்ளது. கிணற்று நீர் வற்றிக்கொண்டுபோகின்றது. எனவே ஒட்டுமொத்தமாக பிரதேச செயலக ரீதியாக விவசாயிகளின் பாதிப்பு சம்பந்தமான ஒரு கணக்கெடுப்பினை செய்வதற்கான நடவடிக்கையினைமுன்னெடுக்கவுள்ளோம் - என்றார்.

### பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார்கூண்டோடுகைது செய்தனர். அரச சேவைக்கு இடையூறு செய்தனர் என்று அவர்கள் அனைவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 10 கனேடியர்களில் இருந்த 4 பெண்களும் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு 6 ஆண்களும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடிகயத்திற்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பெற்றுள்ளார்.

### தடுப்புக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளில் பணத்தை திருடினார் என்று அவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இம்முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபரை ஓகஸ்ட் 22 மாலை தலைமையக பொலிஸார் கைது செய்து தடுப்பு காவலில் வைத்திருந்தனர். தலைமையக பொலிஸ் நிலையத்திற்குள் இருக்கும்கழிப்பறையில் தனது ஆடையைக் கிழித்து தூக்கில் தொங்கி தற்கொலைசெய்துகொண்டார் என்று நேற்று மாலை பொலிஸார் அறிவித்தனர்.

உயிரிழந்தவரின்சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் உடல்கூறுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

சந்தேகநபர் உயிரிழந்ததை அடுத்து, அவர் மீது முறைப்பாடு செய்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இத்தாக்குதலினால் ஜமாலியா-லவ்லேன் பகுதியில் வசித்து வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரின் இறப்புத் தொடர்பில்திருகோணமலை-தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் சந்தேகநபரைப் பொலிஸாரே கொன்றுவிட்டனர் என்று ஜமாலிய நகர்ப் பகுதியில் வாழும் மக்கள் குற்றஞ்சாட்டி, வீதிகளில் டயர்களைப் போட்டு எரிக்கத் தொடங்கினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதையடுத்து நிலமையைக் கட்டுப்படுத்தஅங்குபொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டனர். இது பதற்றத்தை மேலும் அதிகரித்தது.

### பழியைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரப்பாதிப்பின் பின்னரான காலப்பகுதியில் வாழ்க்கைச்செலவுகள் அதிகரித்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். எரிமலையின் மீது சட்டி வைத்து சொசேஜஸ் பொரித்து உண்ணும் நோக்கத்திலேயே பலர் இன்றும் செயற்படுகிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்பின் பாரதூரத் தன்மை பெரும்பாலானோருக்கு இன்றும் விளங்கவில்லை. ஒரு நாள் அரச வருமானம் அரச செலவுகளுக்குகூட போதுமானதாக இல்லாத நிலையில் எவ்வாறுநாட்டைஅபிவிருத்தி செய்வது.

ஒருமாதஅரசவருமானம் அரச சேவையாளர்களுக்கு சம்பளம்வழங்கவும்,நலன்புரி கொடுப்பனவுகளுக்கும்,அரச மற்றும் தேசிய கடன்களுக்கானவட்டியைச் செலுத்தவும் கூடப் போதுமானதாக இல்லை.

அரசமுறை கடன்களுக்குப்பதிலாக சர்வதேச பிணைமுறிசந்தையிலும்அதிககடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நல்லாட்சியில் சர்வதேச பிணைமுறி சந்தையில் அதிக கடன்களை பெற்றது என்பதை மறுக்க முடியாது. அதுவே உண்மை.

வெளிநாட்டு மற்றும் தேசிய கடன்கள் ஊடாகவே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.பொருளாதாரப்பாதிப்பின் பின்னரான காலப்பகுதியில் வெளிநாட்டு முதலீட்டுகளுடனான அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பிரதான காரணியாக அரசமுறை கடன்கள் காணப்படுகிறது. வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த சிறந்த திட்டத்தை எவர் ஆட்சி செய்தாலும் கொண்டுவர முடியாது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்கு கொண்டு வர முயற்சிக்கும் போது ஒரு தரப்பினர் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அதை கடுமையாக எதிர்க்கிறார்கள்.

மக்கள்விடுதலைமுன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க என் மீது கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு எதிராக தேசிய மட்டத்தில்எதிர்ப்புகள்தோற்றம் பெறும் போது அவர்கள் ஒருபோதும் நாட்டுக்கு வரமாட்டார்கள். ஆகவே அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மயிலத்தமடுவில் தடுக்கப்பட்டோர் 6 மணிநேரத்தின் பின்னர் விடுவிப்பு

## பௌத்த தேரர் கொண்ட குழுவின் அட்டகாசம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவனை பகுதி பண்ணையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை மற்றும் அத்துமீறி பௌத்த விகாரை அமைப்பது, காணி அபகரிப்பு தொடர்பாக ஆராய்வதற்கு செவ்வாய்க்கிழமை சென்ற சமய தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 18 பேரை பௌத்த தேரர் தலைமையிலான காணி அபகரிப்பு குழுவினர் வழிமறித்து தடுத்து வைத்தனர்.

குறித்த பிரதேசத்தில் காணி அபகரிப்பு மற்றும்விகாரைஅமைப்பதுதொடர்பாகவும் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாகவும் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய மத தலைவர்கள், ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் சம்பவதினமான செவ்வாய்க்கிழமை காலை மயிலத்தமடு மாதவனை பிரதேசத்திற்கு வாகனங்களில் இரு அருட்தந்தையர்கள், ஒரு மௌளவி, இரு இந்து குருக்கள், 3 ஊடகவியலாள்கள் உட்பட 18 பேர் அடங்கிய குழுவினர் அங்கு சென்று பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடிவிட்டு பகல் ஒரு மணியளவில் திரும்பிக் கொண்டனர்.

இந்தநிலையில்மட்டக்களப்புஎல்லை பகுதியில் அமைந்துள்ள கம்பி பாலத்திற்கு அருகில் வாகனங்களில் திரும்பிக் கொண்டிருந்தபல்சமயமததலைவர்களின் வாகனங்களை கம்பி பாலத்தில் குறுக்கே தேரர் ஒருவருடனான நூற்றுக்கு மேற்பட்வர்கள் ஒன்றிணைந்து வீதி தடையை போட்டு வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகனங்களின் திறப்புக்களை பிடுங்கி எடுத்து அவர்களை தடுத்து வைத்ததுடன் இந்து குருக்கள் ஒருவரை தாக்க முற்பட்டதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தச்சம்பவத்தையடுத்துகரடியனாறு மற்றும் அரங்கலாவ பொலிஸ் பொறுப்பதிகாரிகள்கொண்டபொலிஸ்குழுவினர்அந்த பகுதிக்குச்சென்றுபௌத்ததேரர்உடனான குழுவினருடன் பேச்சில் ஈடுபட்டனர். ஊடகவியலாளர்களின் கமராவில் பதிவு செய்த காட்சிகள் அனைத்தையும் தேரர் அச்சுறுத்தி அழித்ததுடன் இந்த செய்தியை பிரசுரிக்கக் கூடாது என கடிதம் ஒன்றை வற்புறுத்தி பெற்றுள்ளனர்.

தொடர்ந்தும் பௌத்த தேரர் உடனான குழுவுடன் பொலிஸார் பேச்சில் ஈடுபட்டு பின்னர் 6 மணித்தியால தடுத்துவைப்பின் பின்னர் மாலை 6 மணிக்கு விடுக்கவிக்கப்பட்டனர். (05)

# அரச தொழிற்சாலைகள், திணைக்கள பிரிவுகளை உள்ளடக்கிய விரைவான தடயவியல் கணக்காய்வு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய துரித தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு விடயத்திற்குப்பொறுப்பானஅமைச்சர்பிரசன்ன ரணதுங்க, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தனுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதன் மூலம் நிறுவனத்தில் உள்ள அனைத்து குறைபாடுகளையும் வெளிக்கொணர முடியும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அரச தொழிற்சாலைகள் திணைக்களம் போன்ற நிறுவனத்தை நவீன உலகிற்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்வதற்குஇவ்வாறானகணக்காய்வை மேற்கொள்வது இன்றியமையாதது எனவும் தெரிவித்தார்.

அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அதில் கலந்து கொண்டு நிறுவன அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்க அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பிரதான களஞ்சியசாலை, வார்ப்புப் பிரிவு, இயந்திரப் பிரிவு, மின்சாரப் பிரிவு, கனரக வெல்டிங் பிரிவு மற்றும் தச்சுப் பிரிவுஆகியவற்றின்செயற்பாடுகளையும் அமைச்சர் அங்கு அவதானித்தார்.

நிறுவனத்தின் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிறுவனத்தின் உயர் அதிகாரி முதல் கீழ்மட்ட ஊழியர்கள் வரை அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகக் கூட்டத்தை மாதம் ஒருமுறை நடத்துமாறும் அமைச்சர் அங்கு வந்திருந்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஒவ்வொரு கலந்துரையாடலிலும் நிறுவனத்தின் ஒவ்வொரு தொழிற்சங்கத்தையும் ஈடுபடுத்துவது கட்டாயமாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க -

'இந்த நிறுவனத்தில் கணக்காய்வு நடத்தவேண்டும். இதுஇந்தநிறுவனத்தில் உள்ளவர்களிடம் குறை காண செய்யப்படவில்லை.

நிறுவனத்தின் குறைபாடுகள் என்ன என்பதைப் பார்க்கத்தான். தவறுகள் நடந்திருந்தால், திருடப்பட்டிருந்தால், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாரையும்காப்பாற்றநான்தயாராக இல்லை. அரசாங்கத்தில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது தொழிற்சங்கத்துக்கும் விசுவாசமாக இருப்பவர்களாக இருக்கலாம். அந்த கணக்காய்வு அறிக்கை வந்ததன் பிறகு என்னால் எதுவும் செய்ய முடியாது.

இந்த நிறுவனத்தை இலாபகரமான நிறுவனமாக மாற்ற வணிக முன்மொழிவைத்தயாரிக்கவும். இவை அனைத்தும் இந்த நிறுவனத்

தின் முன்னேற்றத்துக்காகவே செய்யப்படுகின்றன.

நிறுவனத்துக்குஉயர்வுகிடைத்தால் ஊழியர்களுக்குநல்லது. அந்தநிர்வாகக் கூட்டத்தில், தொழிற்சங்கங்கள் தங்கள் தொழில் உரிமைகளுக்காகப் பேசலாம்.

ஆனால், எங்களுடைய சில நிறுவனங்கள் உள்ளன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும், பொறியியல் கூட்டுத்தாபனம் கடந்த காலங்களில் ஊழியர்களை நியமித்து அதிக அளவு சம்பளம் வழங்கியது.

ஆனால்இப்போதுஅவர்களால்ஒரு சம்பளம் கூட கொடுக்க முடியவில்லை. இது நிறுவனத்துக்கு சுமை என்று தொழிற்சங்கங்கள் சத்தமிட்டிருந்தால் இந்த நிறுவனத்திற்கு இப்படி நடந்திருக்காது.

ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. நான் எந்த ஊழியர்களையும் நியமிக்கவில்லை. எனக்கு இப்போது அந்த நிறுவனத்தின் நிலை தெரியும். அரசியல் அதிகாரம் வந்து சிலஅழுத்தங்களைபிரயோகிக்கும்போது, இதை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்கும் வலிமை உங்களுக்கு இருக்க வேண்டும்.

நிறுவனம்ஊழியர்களைவேலைக்கு அமர்த்தி பின்பு அவர்கள் வேலையை இழக்கும் போது யார் பொறுப்பு? நிறுவனத்தில் அதிக பணியாளர்கள் இருந்தால்,தேவைப்படுபவர்களைமட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை வேறு இடங்களுக்குஅனுப்பலாம். ஏனென்றால் உங்கள் வருமானத்தில் இருந்துதான் சம்பளம் கொடுக்க வேண்டும்.

செலவுகள் குறைந்து இலாபம் அதிகரிக்கும் சூழ்நிலையை நினைத்துப் பாருங்கள். நான் எனது கருத்தை முன்வைக்கிறேன்.

இந்த விடயத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டு, இந்த யோசனையை மேம்படுத்தி பணி ஆணை உருவாக்க முடியும் என நான் இராஜாங்க அமைச்சருக்கு கூறுகின்றேன். கொள்கை முடிவுகளை எடுக்க உங்களுக்கு உதவவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்'.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்தியானந்தன், அரச தொழிற்சாலைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஆனந்த விஜேசிங்க மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (05)

# அரசியல் நோக்கங்களுக்காக மலையகத்தை சீர்குலைக்காதீர்

## இராதாகிஷ்ணன் வலியுறுத்தல்



ஆளும்தரப்புக்கு ஓர் உறுப்பினர் சென்றால்அவருக்குமூன்று மதுபானசாலைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

அரசியல் நோக்கத்துக்காக மலையக மக்களின் வாழ்க்கையை இல்லா தொழிக்கவேண்டாம். பெருந்தோட்ட மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானசாலைகளை புதிதாக அமைப்பது பாரிய சமூக பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

சுற்றுலாத்துறை கைத்தொழில் அபிவிருத்தி மிக முக்கியமானது. நாட்டின் பல்வேறு பகுதிகள் சுற்றுலா மையங்களாக அடையாளப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளை சுற்றுலாத்துறை மையங்களாக அடையாளப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைவரவேற்கிறோம்.

2018 ஆம் ஆண்டு இலங்கைக்கு 23 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்தார்கள்.அந்த ஆண்டு மாத்திரம் 4.3 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் அரசாங்கத்துக்கு கிடைக்கப் பெற்றது.

மொத்த அந்நிய செலவாணியில் 13 முதல் 15 சதவீதமளவிலான வருமானம் சுற்றுலாத்துறை சேவைக் கைத்தொழில் ஊடாக கிடைக்கப்பெறுகிறது.

சுற்றுலாத்துறைசேவை கைத்தொழிலை விரிவுபடுத்தும் போது பலருக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும். ஆகவே சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்புவழங்குவோம்.

சுற்றுலாத்துறை கைத்தொழிலை விரிவுப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு மலையக பகுதிகளில் மதுபான சாலைகளை அமைப்பது முறையற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் டயகம பகுதியில் மது பான சாலைகளை அமைக்க அரசாங்கம் எடுத்த தீர்மானம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.ஆனால் தற்போது நுவரெலியா பகுதியில் மதுபானசாலைகளை அமைக்க நோட்டீஸ் விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் தரப்புக்கு ஓர் உறுப்பினர் சென்றால் அவருக்கு மூன்று மதுபானசாலைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

அரசியல் நோக்கத்துக்காக மலையக மக்களின் வாழ்க்கையை இல்லா தொழிக்க வேண்டாம், பெருந்தோட்ட மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மதுபானசாலைகளைப் புதிதாக அமைப்பது பாரிய சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். - என்றார். (05)

# தனது ஆதங்கத்தையே ஜீவன் மாத்தளையில் கூறினாராம்



*மாத்தளையில் எனது ஆதங்கத்தையே வெளிப்படுத்தினேன். மாறாக அரசியல் செய்யவில்லை. மலையக மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காக மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.*

*அமைச்சர் ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு*

மலையக மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. எனவே, மலையக மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காக மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்துசெயற்பட வேண்டும்.

தேர்தல் காலத்தில் வேண்டுமானால் அவர்களுக்கு தேவையான கட்சிகளில் வாக்கு கேட்கட்டும் - என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட ஜீவன் தொண்டமான் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு -

மலையக பெருந்தோட்ட நிறுவனங்களே கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. மாறாக எமது மக்கள் அல்லர். எனினும், மக்களையும் குத்தகைக்கு எடுத்தவர்கள்போலவே கம்பனிகாரர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதற்கு அனுமதி வழங்க முடியாது. மக்களின் பிரதிநிதியாகவே நான் அங்கு சென்றேன். எனவே,இதுவிடயத்தில்பிரித்துப்பேச வேண்டாம்.

மலையக மக்களுக்கான காணி உரிமை பற்றி பேசப்படுகின்றது. ஜனாதிபதியிடம் இதனை வலியுறுத்தியுள்ளோம். 10 பேர்ச்சஸ் வழங்குவதற்கான நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது. எனவே, இணைந்து செயற்பட்டு எமது மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்போம்.

என்னைவிட அனுபவம்மிக்க மலையக அரசியல்வாதிகள் உள்ளனர். ஆனால் என்னால் முடிந்தவற்றை நான் செய்துவருகின்றேன். முன்னோக்கி செல்வதற்கான ஆலோசனைகளைக் கூறுங்கள்.

ஜனாதிபதியுடன் கடந்த 11 ஆம் திகதி சந்திப்பு நடைபெற்றது. இதில் தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கேற்கவில்லை. 12 ஆம் திகதி நடைபெற்ற நடை பயணம் இதற்கு காரணம் கூறப்பட்டது.

என்னால் முடிந்த விட்டுக்கொடுப்புகளை நான் செய்துள்ளேன் .முற்போக்கு கூட்டணியின் மேடையில்கூட ஏறினேன். மாத்தளையில் எனது ஆதங்கத்தையேவெளிப்படுத்தினேன். மாறாக அரசியல் செய்யவில்லை.

மலையக பகுதிகளில் சிங்கள, முஸ்லிம் எம்.பிக்களும் உள்ளனர். அவர்களும் பேச்சுக்கு வர வேண்டும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சரத் வீரசேகரவின் உரைக்கு கண்டனம்

நாடாளுமன்றத்தில் தனக்கிருக்கும் சிறப்புரிமையைப் பயன்படுத்தி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை மிக மோசமான வார்த்தைகளால் விமர்சித்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர. குருந்தூர்மலையில் இந்துத் தமிழ் மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டுப் பொங்கல் நடத்துவதற்கு அனுமதி வழங்கியமைக்காகவே அவர் இவ்வாறு நீதிபதியை விமர்சித்திருக்கிறார்.

இதே விமர்சனத்தை அவர் நாடாளுமன்றத்திற்கு வெளியே மேற்கொண்டிருப்பாரானால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுக்குள்ளாகிச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார். அதைத் தவிர்ப்பதற்காகவே நாடாளுமன்றத்திற்குள் நீதிபதியைச் சகட்டுமேனிக்கு விமர்சித்திருக்கிறார் அவர்.

சரத் வீரசேகர முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை நாடாளுமன்றத்தினுள் விமர்சிப்பது இது முதற்றடவையல்ல. இதற்குமுன்னரும் அவர் இதேபோன்று கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருக்கிறார். குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை கட்டப்பட்டது தொடர்பில் நேரில் விசாரணை நடத்த நீதிபதி சென்ற சமயம், அங்கே சென்றிருந்த சரத் வீரசேகர நீதிமன்ற நடவடிக்கைகளுக்குள் தலையிட்டுக் கருத்துச் சொல்ல முற்பட்டபோது, அதற்கு இடமளிக்காமல் அவரை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தியிருந்தார் நீதிபதி.

அந்தக்கோபத்தை அவர் உடனடியாக நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். ஆடி 7 அன்று அவரது உரை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் முல்லைத்தீவு நீதிபதிக்கு இல்லை, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக நீதிபதிகளும் செயற்படுகின்றார்கள், குருந்தூர்மலையில் இருந்து என்னை வெளியேற்றிய நீதிபதியின் செயலை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தனது உரையில் சீற்றத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தப்பின்னணியிலேயே சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதியை மீண்டும் காட்டமாக விமர்சித்து, பயன்படுத்தத் தகாத வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். அவரது செயல் கடுமையான கண்டனத்துக்குரியது. அனைத்துத்தரப்பினரும் அதனைக் கண்டிக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய ஆளும் தரப்பு உறுப்பினர்களும் அரசுத் தலைவர் மற்றும் தலைமை அமைச்சரும்கூட அவரது உரையைக் கண்டித்து அவரை அடக்கியிருக்கவேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை என்பது பெரும் அவமானம். கவலை.

சரத் வீரசேகரவின் ஆடி மாத நாடாளுமன்ற உரையே, நீதிமன்றத்தின் மீதான மிக மோசமான தாக்குதல் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அறிக்கையில் கண்டித்திருந்தது. நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்ற ஆதிக்கத்துக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும் போக்கு மேலோங்கியிருப்பது குறித்தும் அந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தச்சமயத்திலும் சக சிங்கள அரசியல்வாதிகளும் அரசுத் தலைவர் மற்றும் தலைமை அமைச்சரும் சரத் வீரசேகரவைக் கண்டிக்கவில்லை. அவர் செய்வது தவறு என்று அவருக்கு உணர்த்தவில்லை. அவரது கருத்துக்காக தண்டிக்கவில்லை. இதன் விளைவே சரத் வீரசேகர இன்னும் ஒருபடி மேலே சென்று கீழ்த்தரமான விமர்சனங்களை முன்வைக்க வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த நிலமை தொடர்வதற்கு அனுமதிக்கக்கூடாது. உடனடியாகக் கட்டுப்படுத்தப்படவேண்டும். அதற்கு உரிய வகையில் நாடாளுமன்றத்தில் சரத் வீரசேகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நீதிபதி தொடர்பான அவரது கருத்துக்கு அவர் நாடாளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கேட்கும் நிலை உருவாக்கப்படவேண்டும். அப்போதுதான் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதுடன் இனிவரும் காலங்களில் இதுபோன்ற அத்துமீறல்கள் இடம்பெறாமலும் பார்த்துக்கொள்ள முடியும்.

# காலிச் சிறையினுள் தொற்றுநோய் சுகாதார அவசர நிலை பிரகடனம்

### சமூகத்திற்குள்ளும் நோய் பரவலாம் என அச்சம்




காலிச்சிறைக்குள் பரவுகின்ற நோய் காரணமாக சமூகத்திற்குள் பக்டீரியா பரவும் ஆபத்துள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

தொற்றுநோய் வைத்தியசாலையின் வைத்தியர் ஆனந்த விஜயவிக்கிரம இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக்கு சென்றவர்கள் கைதிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருந்தால் சிறையிலிருந்து பக்டீரியா சமூகத்திற்குள் பரவுவதற்கான வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனினும் பக்டீரியா சமூகத்திற்குள் பரவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோய்கள் தொடர்பிலான பிரதிசுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கைதிகளுக்கும் சிறைச்சாலை பணியாளர்களுக்கும் உரிய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நோய்க்கான முக்கிய காரணத்தை கண்டறிவதற்கான விசாரணைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமீபத்தில் சிறைச்சாலைக்கு சென்றுவந்த வெளிநபர்களை கண்டுபிடிக்குமாறு மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை தற்போதைய நிலை காரணமாக காலிச்சிறைச்சாலையில் சுகாதார அவசரநிலை பிரகடனம்செய்யப்பட்டுள்ளது. (05)

# எல்.பி.எல். தொடக்க நிகழ்வுகளில் தேசிய கீதம் பாடப்பட்டமுறை தவறு

### விசாரணைக் குழு தெரிவிப்பு



எல்.பி.எல். போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் தேசிய கீதம் அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள மெல்லிசையின் அடிப்படையில் பாடப்படவில்லை என தேசிய கீதம் இசைக்கப்பட்ட விதம் குறித்து விசாரணை செய்த குழு தெரிவித்துள்ளது.

பாடகி உமார சிங்கவன்ச தேசிய கீதத்தை அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விதம்போன்று பாடவில்லை என விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த நிர்வாகம் பொது-நிர்வாக அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

2023 எல்.பி.எல். போட்டியின் ஆரம்பநிகழ்வில் பாடகி உமார சிங்கவன்ச தேசிய கீதத்தை பாடிய விதம் குறித்து சர்ச்சை உருவாகியமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொதுநிர்வாக அமைச்சு குழுவொன்றை நியமித்திருந்தது.

தேசிய கீதத்தின் மெல்லிசை அரசமைப்பில் நடுத்தர தொனியில் பாடுவதாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் உமாரா அந்த கீதத்தை அதிக சுருதியில் பாடியிருந்தார்.

தேசிய கீதத்தை அதிக சுருதியில் பாடும்போது கீதத்தின் முக்கிய பாடல் வரிகளும் சிதைக்கப்பட்டன என விசாரணை குழு தெரிவித்துள்ளது. இதனை தொடர்ந்து விசாரணை குழு சட்டமா அதிபர் திணைக்களத்தை தொடர்புகொண்டு மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நிபுணர்குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தேசிய நிகழ்வில் தேசிய கீதத்தை பயன்படுத்துவது தொடர்பில் கூடிய விரைவில் விதிமுறையை சேர்க்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (05)

# உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயன்முறையை நிராகரிக்கும் பெண்கள் உரிமை அமைப்புக்கள்

இலங்கைஅரசாங்கத்தால் தற்போது முன்னெடுக்கப்படும் கடன்மறுசீரமைப்புச் செயன்முறையை நிராகரிப்பதாகத் தெரிவித்திருக்கும் பெண்கள் உரிமை அமைப்புக்கள், இந்தச்செயன்முறையின் ஊடாக கடன்களை மீளச்செலுத்துகை சுமை தொழிலாளர் வர்க்கத்தின்மீது சுமத்தப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளன.

அதுமாத்திரமன்றி நாடு முகங்கொடுத்திருக்கும் கடன் நெருக்கடிக்கு மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடியவாறான நிலைபேறானதொரு தீர்வை உடனடியாக வழங்குமாறும் அந்த அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

'கடனும் பெண்களின் மனித உரிமைகளும்' என்ற தலைப்பில் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கை உள்ளடங்கலாக ஆசிய நாடுகளைப் பிரதிநிதித்து-வப்படுத்தி பெண்ணுரிமை செயற்பாட்டாளர்கள் பலர் கலந்துகொண்டிருந்ததுடன், நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் கடன்நெருக்கடியால் தமது அன்றாட வாழ்வில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அதனை உரியவாறு கையாள்வதற்கு ஏதுவான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்காமை என்பன பற்றிய தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

அத்தோடு இவ்விவகாரத்தில் குறிப்பாக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதியியல் கட்டமைப்புக்களின் வரலாற்று ரீதியான மற்றும் தற்கால வகிபாகத்தையும் அவர்கள் கேள்விக்குட்படுத்தினர். 'சாதாரண தொழிலாளர்களின் சமூகப்பாதுகாப்பு நிதியங்கள் கடன்களை மீளச்செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தமட்டில் மிகவும் கடின உழைப்பாளர்களாக இருப்போரின் ஒரேயொரு சேமிப்பாக இருக்கக்கூடிய நிதியத்தையே அரசாங்கம் ஈடுவைத்திருக்கின்றது.

உள்ளகக் கடன்மறுசீரமைப்பு விவகாரத்தில் பாரிய மீறல்கள் இடம்பெறுகின்றன. இம்மறுசீரமைப்புச்செயன்மு-றை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படும் நிலையில், அப்போது தொழிலாளர்கள் அவர்களது பாதுகாப்பு நிமித்தமான சேமிப்பை இழந்துவிடுவார்கள் என்று சுட்டிக்காட்டிய அவர்கள், தற்போதைய கடன் நெருக்கடிக்கு மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யக்கூடியவாறான நிலைபேறானதொரு தீர்வை உடனடியாக வழங்குமாறு வலியுறுத்தினர். (05)

# கண்டி பெரஹரவில் யானைகள் குழப்பம் பெண் காயம்; மூவர் ஏரிக்குள் பாய்ந்தனர்

கண்டியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கும்பல்பெரஹெராவின் போது விஷ்ணு தேவாலயத்தைச் சேர்ந்த இரண்டு யானைகள் குழப்பமடைந்ததில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த இரண்டு யானைகளும் குழப்பத்தில் ஈடுபட்டதையடுத்து, ஸ்ரீதலதா மாளிகைக்குச் சொந்தமான மேலும் இரண்டு யானைகளும் குழம்பின.

இந்நிலையில், தலதா மாளிகைக்குச் சொந்தமான இரண்டு யானைகளும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு வீதிகளில் ஊர்வலமாகச் சென்றன. மற்றைய இரண்டு யானைகளும் குயின்ஸ் ஹோட்டல் அருகே கட்டப்பட்டிருந்தன.

சம்பவத்தின்போது, பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், மூவர் அச்சமடைந்து கண்டி ஏரியில் (நுவர வெள)வீழ்ந்துள்ளனர். பின்னர், மூவரையும் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவு அதிகாரிகள் மீட்டனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தொல்லியல் சின்னங்கள் கண்டெடுக்கப்படும் இடங்களை பௌத்த இடமாக காட்ட முயற்சிப்பதனாலேயே பிரச்சினை

## முஷாரப் எம்.பி. சுட்டிக்காட்டு



நாட்டில் உள்ள தொல்லியல் சின்னங்கள் ஒரு சாராருக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அவை முழு நாட்டு மக்களினதும் சொத்தாகும் . என்றாலும் தொல்லியல் சின்னங்கள் அடையாளம் காணப்படும் போது அந்த இடத்தை பௌத்த இடமாக காட்ட முயற்சிப்பதாலேயே பிரச்சினைகள் உருவாகின்றன என எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியிலும் ஆங்காங்கே சில இனவாத மோதல்களை அவதானிக்கின்றோம். மீண்டும் ஒரு தேர்தலை மையப்படுத்தி நாட்டை சின்னாபின்னமாக்க எல்லா தரப்பினரும் செயற்படுகின்றனரா? என்ற கேள்விகள் எழுகின்றன. தொல்லியல் விடயம் ஏதேனும் மத விடயத்துடன் தொடர்புடையது என்று எப்போது பேசத் தொடங்கினோமோ அப்போதிருந்தே இந்த நாட்டில் பிரச்சினைகள் ஆரம்பித்துள்ளன. இந்த விவகாரங்களுக்காக பணத்தை பௌத்தபிக்குகளே வழங்குகின்றனர் என்று அண்மையில் ஜனாதிபதி கூறியிருந்தார்.

இந்த இடத்தில் இருந்துதான் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. அவர்களிடம் பணத்தை பெற்றுக்கொள்ள இருக்கும் உரிமை எங்கிருந்து கிடைத்தது? அவர்களுக்கு பணம் எங்கிருந்து வருகின்றது? தொல்லியல் இடம் என்பது எல்லா மதத்தவர்களுக்கும் உரித்தான இடம் என்பதை நாம் எப்போது ஏற்றுக்கொள்ளப் போகின்றோம்.

பாகிஸ்தானில் பௌத்த தொல்லியல் அடையாளங்கள் பாதுகாக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அந்த நாட்டின் சொத்தாக இன்னுமொரு மதத்தவர்களால் பார்க்கப்படுகின்றது. ஆனால் இங்கே இந்து, இஸ்லாம் மதங்கள் சார்ந்த தொல்லியல் அடையாளங்கள் தொடர்பில் தொல்லியல் திணைக்களத்துக்கோ, அமைச்சுக்கோ எந்த அக்கறையும் இல்லை. தொல்லியல் சின்னம் இங்குள்ள அனைவருக்கும் உரித்தானது. இது தேசத்தின் சொத்து.

இதனை ஒருசாரார் மாத்திரம் உரிமை கோருகின்றனர். தொல்லியல் இடம் என்று அடையாளம் காணும் போது உடனடியாக சிலையை வைத்து பௌத்த இடமாக அடையாளம் காட்டும் போதே பிரச்சினை வருகின்றது.

இன்னும் இன்னும் நாங்கள் இனவாதம், மத வாதத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டால் நாடு வாழ்வதற்கு பொருத்தமில்லாத நாடாகவே மாறும். - என்றார். (05)

# நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள்

## மத்திய வங்கி வெளியிட்டது

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் நிதியியல் சேவை வழங்குநர்களால் பின்பற்றப்பட வேண்டிய புதிய ஒழுங்கு விதிகள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டிருப்பதுடன், இவை எதிர்வரும் 12 மாத காலத்துக்குள் நடைமு-றைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ) பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் வகுக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 9 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற அனைத்து நிதியியல் சேவை வழங்குநர்களுக்கும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையதாகவிருக்கும் என்பதுடன் இதனூடாக வங்கித்தொழில் சட்டம், நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக்குத்தகைக்கு விடுதல் சட்டம் என்பவற்றின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒழுங்குவிதிகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக வகுக்கப்பட்டிருப்பதாகவும், இவை இலங்கை மத்திய வங்கி மூலமான சந்தை நடத்தை மேற்பார்வைக்கு ஏதுவான அடித்தளத்தை உருவாக்கி, அதனூடாக நாட்டில் நம்பிக்கையானதும் வலுவானதுமான நிதியியல் முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் துணைபுரியும் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது.

ஒழுங்குபடுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகளைக் கையாளும் தனிநபர்களும் வியாபாரங்களும் மேம்படுத்தப்பட்ட வகையில் நியாயமாகவும், வெளிப்படையான விதத்திலும் நடத்தப்படுவதுடன் அவர்களது நிதிசார் செயற்பாடுகள் தொடர்பில் மீயுயர் நம்பிக்கையுடன் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலச்செய்-யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கூறுகளை இவ்வொழுங்குவிதிகள் உள்ளடக்கியுள்ளன.

அது மாத்திரமன்றி டிஜிற்றல் நிதிச்சேவைகள், வாடிக்கையாளர் தரவுப்பாதுகாப்பு மற்றும் விசேட தேவையுடைய வாடிக்கையாளர்களின் நிதியியல் தேவைப்பாடுகள் என்பன தொடர்பான நவீன நடவடிக்கைகளும் இவ்வொழுங்கு விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும் மத்திய வங்கியின் பிணக்குத்தீர்த்தல் பொறிமுறைக்கு மாற்றீடாக, குறைநிரப்புச்செய்-யப்பட்ட உள்ளக முறைப்பாட்டுக்கையாள்கை பொறிமுறையையும் இந்த ஒழுங்குவிதிகள் பிரேரிக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கடந்த 9 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 12 மாதகாலத்துக்குள் நடைமு-றைப்படுத்தப்படும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. (05)

# மதுபானங்களின் விலைகளை குறைக்க டயானா கோரிக்கை



இரவு 10 மணிக்கு பின்னர் உறங்குவதற்காக சுற்றுலா பயணிகள் இலங் கைக்கு வருகை தரவில்லை. இரவு பொருளாதாரத்தை அமுல்படுத்தாவிட்டால் சுற்றுலாத்துறையில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது.

மதுபானங்களின் விலைகளை உடனடியாகக் குறைக்க வேண்டும். இல்லாவிடின் சாரயம் காச்சி குடிப்பவர்களினதும் போதைப்பொருள் பாவனையாளர்களினதும் எண்ணிக்கை அதிகரிக்கும். அது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

சுற்றுலாபயணிகள் இரவு 10 மணிக்குபின்னர் உறங்கு-வதற்காக இந்த நாட்டுக்கு வருவதில்லை. இலங்கையின் சுற்றுலாத்துறை மையங்கள் இரவில் திறக்கப்படாது இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் 10 மணிக்கு பின்னர் உறங்கிவிடுகிறார்கள். முதலில் 10 மணிக்கு தூங்கும் இந்த பழக்கத்தில் இருந்து விடுப்பட வேண்டும். மாலைதீவு போன்ற நாடுகளில் இவ்வாறு இல்லை. சுற்றுலாத்துறையினருக்காக விசேட திட்டங்கள் உள்ளன. உலக நடப்புக்கு அமைய சுற்றுலாத்துறையில் மாற்றம் ஏற்படுத்தாவிட்டால் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. இலங்கைக்கு இரவு நேர பொருளாதாரம் முக்கியமானதாகும். இலங்கை உலகநாடுகளுடன் தொடர்புபட வேண்டும். இவ்வளவு அழகான நாட்டை இப்படி இரவில் பூட்டி வைப்பதால் பலனில்லை. உலக நாடுகளில் 70 வீதம் இரவு நேர பொருளாதாரம் உள்ளது. இது தொடர்பில் யோசனைகளை ஜனாதிபதியிடம் முன் வைத்துள்ளோம்.

இரவு 10 மணிக்குப் பின்னர் சுற்றுலா ஹோட்டல்களில் பார்கள் மூடப்படுகின்றன. 10 மணிக்கு மேல் மதுபானசாலைகளை ஏன் திறந்து வைக்க முடியாது. இவற்றை மாற்ற வேண்டும். இதேவேளை மதுபானங்களில் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் சாராயத்தின் விலை அதிகமாக இருக்கின்றது.

இதனால் மக்கள் கசிப்பு காச்சி குடிக்க நேரிடும். அத்துடன் போதை மாத்திரையை பயன்படுத்தும் நிலைமையும் ஏற்படும். இதனால் மதுவரித் திணைக்களத்திற்கு வருமானமே இல்லாமல் போகும். இதனால் விலைகளை குறைக்க வேண்டும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# குருந்தூர் மலையில் இந்து மத வழிபாடுகளால் பௌத்தர்களின் மனம் பாதிக்கப்பட்டுள்ளதாம்

## ஜயந்த சமரவீர கூறுகிறார்



குருந்தூர் மலையில் இந்துக்கள் மத வழிபாடுகளில் ஈடுபடும் சூழலை தொல்பொருள் திணைக்களமே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பொங்கல் நிகழ்வால் பௌத்தர்களின் மனம் பாதிக்கப்பட்டுள்ளது. நல்லூர் கோவிலில் பௌத்தர்கள் பௌத்த மத வழிபாடுகளில் ஈடுபடுவதில்லை. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர புத்தசாசனம், மத விவகாரங்கள் மற்றும் கலை கலாசார அமைச்சரை நோக்கி கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த புத்தசாசனம், மத விவகாரங்கள் மற்றும் கலை கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்ததாவது:

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் 2 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நான் குறிப்பிடும் கருத்துக்கள் வழக்குக்கு சாதகமாகவும் பாதகமாகவும் அமையலாம். ஆகவே கேள்விக்கு பதிலளிப்பதை தவிர்த்துக்கொள்கிறேன் - என்றார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர குருந்தூர் மலை பௌத்தர்களுக்கு சொந்தமானது என்பதை உறுதிப்படுத்தும் பல சான்றுபொருள்கள் கிடைத்துள்ளன.

குருந்தூர் மலையில் இந்துக்கள் வழிபாட்டில் ஈடுபட்டார்கள் என்பதற்கு எவ்வித சான்றுகளும் கிடையாது. இருப்பினும் குருந்தூர் மலை தமிழ் இந்துக்களுக்கு சொந்தமானது என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

குருந்தூர் மலையில் தமிழர்கள் இந்து மத வழிபாடுகளில் ஈடுபடுவற்கு தொல்பொருள் திணைக்களம் வாய்ப்பளித்துள்ளது. இவ்வாறான நிலையில் தான் அவர்கள் குருந்தூர் மலைக்குச் சென்று பொங்கல் வழிபாடுகளில் ஈடுபடுகிறார்கள். தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க வேண்டிய தொல்பொருள் திணைக்களம் தொல்பொருள் கட்டளைச்சட்டங்களுக்கு புறம்பாக செயற்படுகிறது.

குருந்தூர் மலை தொடர்பான வழக்கில் தொல்பொருள் திணைக்களம் சார்பில் நீதிமன்றத்துக்கு முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி 'குருந்தூர் மலையில் இந்து மத வழிபாடுகளில் ஈடுபட தொல்பொருள் திணைக்களம் தடை விதிக்கவில்லை' என மன்றுக்கு அறிவித்துள்ளார். இதன்பின்னரே முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குருந்தூர் மலையில் இந்துக்களின் மத வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளதால் பௌத்தர்களின் மனம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் மதவாத முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு ஒரு காரணியாக அமையும். நல்லூர் கோவிலுக்குச் சென்று பௌத்தர்கள் வழிபடுகிறார்கள். ஆனால் எவரும் அங்கு பௌத்த மத வழிபாடுகளில் ஈடுபடுவதில்லை.

குருந்தூர் மலை விவகாரத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு எதிரான என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலை கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவை நோக்கி கேள்வி எழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த புத்தசாசன, மத விவகாரங்கள் மற்றும் கலை கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இந்த விடயத்தை சுற்றி வளைக்காமல் ஓரிரு வார்த்தைகளில் கேட்டிருக்கலாம். இந்த கேள்விக்கு நான் ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கிறேன்.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் நான் குறிப்பிடும் கருத்துக்கள் அந்த வழக்கு விசாரணைக்கு சாதகமாகவும் அமையும் பாதகமாகவும் அமையும் ஆகவே நீங்கள் (ஜயந்த சமரவீர) முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர்த்துக் கொள்கிறேன். - என்றார். (05)

# சின்னமுத்து நோய்ப் பரவலை முன்கூட்டியே தடுப்பதற்கு மத நிறுவனங்களுடன் சந்திப்பு





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பியலாளர் டாக்டர் எம்.ஏ.சி.எம். பாலால் சின்னமுத்து மற்றும் ஜெர்மன் சின்னமுத்து உள்ளிட்ட தொற்று நோய்கள் தொடர்பிலும் அதற்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதன் அவசியம் பற்றியும் செவ்வாய்க்கிழமை பணிமனையின் கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது கொழும்பை அண்டிய பகுதிகளில் தடுப்பூசிகளை பெறாத சில குழுக்களால் இவ்வாறான நோய்ப்பரவல் ஏற்படுவதாக அறிய கிடைக்கப்பெற்றதை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் பற்றியும் குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டதுடன் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்து-வதற்காக மத நிறுவனங்களின் பங்களிப்பைப் பெறுவதற்கான பொறிமுறைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத நிறுவனங்களின் பங்களிப்பை பெற்று மத நிறுவனங்களின் ஊடாக தொற்று நோய்கள் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பிலான விழிப்புணர்வை வழங்கி பிராந்தியத்தில் இவ்வாறான சடுதியான நோய்கள் ஏற்படுவதையும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் பாரதூரமான இழப்புக்களை தவிர்ப்பதற்காகவும் இவ் விசேட கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்ததாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது பிரதான உரையில் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக கல்முனை பிராந்திய உளநலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபலால் தற்போது சில பகுதிகளில் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மத நிறுவனங்களின் ஊடாக அது தொடர்பிலான விழிப்புணர்வை வழங்குவது பற்றிய விசேட உரை ஒன்றும் நிகழ்த்தப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம். பி. அப்துல் வாஜித், பணிமனையின் பிரிவுத் தலைவர்களும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் மத குருக்களும் பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகரும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# ஒக்ரோபர் முதல் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய 9 பிளாஸ்டிக் பொருள்களுக்கு வருகின்றது தடை

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நாட்டில் ஒரு முறை பயன்படுத்தக்கூடிய 9 பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி அல்லது விற்பனைக்கு தடை விதிக்கப்படுவதாகமத்தியசுற்றாடல் அதிகாரசபைதெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுற்றாடல் அமைச்சர்நஸீர்அஹமட்டால் வெளியிடப்பட்டுள்ளதாக அதிகாரசபை தெரிவிக்கின்றது.

ஒருமுறைபயன்படுத்தக்கூடிய குடிநீர் குவளைகள், பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள், முற்கரண்டி மற்றும் கத்திகள் உட்பட 9 பிளாஸ்டிக் பொருள்களுக்கே ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவற்றின் உற்பத்தி, உள்ளூர் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்தல், விற்பனை, இலவச சலுகை அல்லது காட்சிப்படுத்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன எனவும், அந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிகளின்படி சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (05)



# கொழும்பு தாமரை கோபுரத்தின் காட்சி மையம் மாற்றமடைந்தது

கொழும்பு தாமரைக் கோபுரத்தின் காட்சி மையம் தற்போது புதிய மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது. இதன்படி, கோபுரத்தின் பார்வைமையஇடத்திலிருந்து காணக்கூடிய கொழும்பின் புகழ்பெற்ற இடங்கள் பற்றிய விழிப்புணர்வு பலகைகளை காட்சிப்படுத்தும் வேலைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கொழும்பு 'லோட்டஸ் டவர் மேனேஜ்மென்ட் கம்பனிபிரைவேட்லிமிடெட்,' காணக்கூடிய இடங்களைப் பற்றிய தகவல்களைக் கொண்ட ஒரு குறிப்பைச் சேர்த்துள்ளது.

தாமரை கோபுரத்தின் கண்காணிப்பு அறையின் சுவர்களில் சேதம் ஏற்பட்டுள்ளதாக கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டதுடன், அவற்றை மீளமைப்பதற்கு பாரிய செலவினம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்நிலையில்,இந்தபுதிய திட்டத்தின்கீழ்,சுவர்கள்சேதமடையாதவகையில்பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.

அதன்படி, தாமரை கோபுரத்தின் கண்காணிப்பு அறையில் அடையாளம் காணப்பட்ட சவால்களை அடிப்படையாகக் கொண்டு, இந்த வேலைத் திட்டம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தாமரை கோபுரம் ஒரு புதிய கல்விப் பார்வை இடமாக உள்ள தகவல்களும் இங்கே காட்டப்படுகின்றன. (05)

# கிளிநொச்சியில் திடீர் சோதனை 13 வர்த்தகர்கள் கைதாகினர்

கிளிநொச்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் 13 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி பகுதியில் விலை கட்டுப்பாட்டு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை, விலை காட்சிப்படுத்தாமல் பொருள்களை விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளில் 13 வர்த்தகர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்கிளிநொச்சி மாவட்டநீதிவான்நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான்எஸ்.சுபராஜினிமுன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதைஅடுத்து,காலாவதியான முகப்பூச்சு, கிரீம், பிஸ்கட், கேக் மற்றும்சோடாஉள்ளிட்டபொருள்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய ஏழு வர்த்தகர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விலை காட்சிப்படுத்தாமல் பொருள்களை விற்பனைக்காக காட்சிப்படுத்திய மற்றும் விற்பனை செய்த ஆறு வர்த்தகர்களுக்கு தலா ஐயாயிரம் வீதம் முப்பது ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (05)

# துறைமுக அமைச்சு அலுவலகத்திற்கு மின்சார சபையின் சிவப்பு அறிவித்தல்

கொழும்பு கோட்டை உலக வர்த்தக நிலையத்தின் இருபத்தைந்தாவது மாடியில் உள்ள துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை இராஜாங்க அமைச்சின் அலுவலக மின் கட்டணத்தை செலுத்தாத காரணத்தால், சிவப்பு அறிவிப்புடன் 80 லட்சம் ரூபாவுக்கான கட்டணப் பட்டியலை மின்சார சபை அனுப்பியுள்ளது.

இதேவேளை, தனது அலுவலக மின்சாரம் துண்டிக்கப்படும் என தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும்கப்பற்றுறைஇராஜாங்கஅமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள்மற்றும்கப்பற்றுறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்த போதும் இதுவரையில் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (05)

# முதலுதவிப் பயிற்சிப் பாசறை குடாநாட்டில் நடத்த ஏற்பாடு

யாழில் 'சிறகுகள்' அமையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோர்களுக்கான முதலுதவிப் பயிற்சிப் பாசறையொன்று எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இலங்கை சென்.ஜோன் அம்பியுலன்ஸ் சேவையினரை வளவாளர்களாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இப்பயிற்சிபாசறை, யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள புனித ஜோன் அம்பியுலன்ஸ் சேவை பணிமனையில் காலை 8.30 மணி முதல் 2.00 மணி வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்இப்பயிற்சியில்கலந்துகொள்ளபவர்களுக்கு சான்றிதழ் கட்டணமாக பாடசாலை மாணவர்களுக்கு 300.00 ரூபாயும் ஏனையவர்களுக்கு 1250.00 ரூபாயும் அறவிடப்படும் எனவும், மேலதிக விவரங்களை பெற 0756322173 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

# மாடு திருடிய பொலிஸ் கான்ஸ்டபிள் பணியில் இருந்து இடைநிறுத்தம்

## கந்தளாயில் சம்பவம்

மாடு ஒன்றை திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ்கான்ஸ்டபிள் பணியில் இருந்து செவ்வாய்க்கிழமை இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 31வயதுடையபொலிஸ்கான்ஸ்டபிள் ஒருலட்சத்து50ஆயிரம்ரூபா பெறுமதியானமாடுஒன்றைதிருடிய குற்றச்சாட்டில் கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைதானார்.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில்ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர் நீதிமன்ற பிணையில்வெளிவந்துள்ளார்.

இந்நிலையில், அவரை திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடனடியாக பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளார். (05)

# கண்ணிவெடி ஆலோசனைக் குழு வவுனியா பல்கலையுடன் ஒப்பந்தம்

வவுனியாப் பல்கலைக்கழகத்திற்கும் கண்ணிவெடிகள் ஆலோசனைக் குழுவிற்கும் இடையிலான ஒப்பந்தமொன்று செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வவுனியாப்பல்கலைக்கழகத்தில்இடம்பெற்றஇந்நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன், வியாபார கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் யோ.நந்தகோபன், மக் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கிறிஸ்டி மெக்லெனன், திறன் அபிவிருத்தி நிபுணர் த.செந்தூரன் மற்றும் தொழில் மற்றும் சமூகத் தொடர்புப் பிரிவு இணைப்பாளர், சி.சிவனேந்திரன், பல்கலைக்கழக அதிகாரிகள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த ஒப்பந்தத்தம், சரியான தொழில்வாய்ப்பு மற்றும் புதிய தொழில்களுக்கு தயார்படுத்தல் மற்றும் புதிய முயற்சியாளர்களை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# 2 தூதுவர்களும் உயர்ஆணையர் ஒருவரும் ரணிலிடம் நற்சான்றிதழ்கள் கையளிப்பு





இலங்கைக்கான புதிய தூது வர்களாக நியமனம் பெற்றுள்ள இரு வரும் உயர்ஸ்தானிகர் ஒருவரும் நேற்று (புதன்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிடம்தமதுநற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

இத்தாலி குடியரசு மற்றும் ஜேர்மனி பெடரல் குடியரசு ஆகியவற்றின் இலங்கைக்கான புதிய தூதுவர்களும், பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும்வடஅயர்லாந்துக்கானபுதியஉயர்ஸ்தானிகருமே இவ்வாறுநற்சான்றிதழ்பத்திரங்களைக்கையளித்தனர்.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்த தூதுவர்களை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க வரவேற்றார்.

நற்சான்று பத்திரங்களை கையளித்தவர்களின் விவரம் கீழ்வருமாறு -

01. பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக் .

02. ஜேர்மனி பெடரல் குடியரசின் தூதுவர் - கலாநிதி பெலிக்ஸ் நியூமன்.

03. இத்தாலி குடியரசின் இலங்கைக்கான தூதுவர் - டாமியானோ பிரான்கோவிக்.

நற்சான்று பத்திரங்களைக் கையளித்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன்ஏக்கநாயக்க, வெளிநாட்டுஅலுவல்கள்அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்டவர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# லைக்கா குழும தலைவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு





லைக்காகுழுமத்தின்தலைவர்கலாநிதி அல்லிராஜா சுபாஸ்கரன் விஷ்வ கீர்த்தி, ஸ்ரீ அபிமான, ஸ்ரீஜனரஞ்சன தேசாபிமான்ய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வு வணக்கத்துக்குரிய மகாசங்கத்தினரின்முன்னிலையில், கடந்த (செவ்வாய்கிழமை) பிற்பகல் வரலாற்று சிறப்பு மிக்க மாத்தறை வெஹேரே ஸ்ரீ பூர்வராமவிகாரையில்இடம்பெற்றிருந்தது.

சிறந்த சேவை, உள்ளார்ந்த திறமை மற்றும்தகுதியான நடத்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

முப்பெரும் சங்கத்தின் அதி வணக்கத்திற்குரிய கௌரவ மாகாநாயக்க தேரர், முப்பெரும் சங்கத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட தேர்வு குழுவால் இந்த விருது அறிவிக்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

அல்லிராஜா சுபாஸ்கரன் பிரித்தானியாவில் வாழும் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தொழிலதிபர் ஆவார்.

இவர் ஆசியாவின் மிகச்சிறந்த தொழிலதிபருக்கான தங்க விருது, சர்வதேச தொழில்முனைவோர் விருது பெற்றுள்ளதுடன், வணிக நிர்வாகம் மற்றும் தத்துவத்துக்கான கௌரவ கலாநிதிப் பட்டத்தை மலேசியாவின் அமிஸ்ட் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார்.

1972ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி முல்லைத்தீவில் பிறந்த இவர் லைக்கா நிறுவனத்தின் தலைவர் என்பதுடன், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்ற முதலீட்டாளரும் ஆவார்.

தகவல் தொடர்புத் துறையில் அழியாத புகழை ஏற்படுத்தியுள்ள சுபாஸ்கரன் அவர்கள், இந்திய திரையுலகில் தவிர்க்க முடியாத தயாரிப்பாளராகவும் இருந்து வருகிறார்.

2014 இல் கத்தி திரைப்படத்தின் தயாரிப்பாளராக திரையுலகில் நுழைந்த அவர், பின்னர் 2018 இல் மிகப் பெரிய பொருட் செலவில் 2.0 படத்தை தயாரித்தார். 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில், பொன்னியன் செல்வன் முதல் பாகம் மற்றும் இரண்டாம் பாகத்தை தயாரித்திருந்ததுடன், சர்வதேச சினிமாவில் மிகவும் செல்வாக்கு மிக்க ஆங்கிலம் அல்லாத மொழிப் படமாக உலகளவில் கொண்டுச் சென்றார். லைக்கா தயாரிப்பு நிறுவனத்தின் ஊடாக சினிமா துறைக்கு பெரும் பங்காற்றி வரும் அவர், விளையாட்டு துறைக்கும் கைகொடுத்து வருகிறார்.

இதன்படி, தமிழ்நாடு பிரீமியர் லீக் போட்டியில் கோவை கிங்ஸ் அணிக்கு லைக்கா அனுசரணை வழங்கிவருவதுடன், 2021ஆம் ஆண்டு முதல் லங்கா பிரீமியர் லீக் போட்டிகளில் ஜப்னா கிங்ஸ் அணியின் உரிமையாளராகவும் லைக்கா நிறுவனம் இருந்துவருகிறது. லைக்கா நிறுவனம் 2012ஆம் ஆண்டு 'உலகளாவிய வணிக நிறுவனமாக' அங்கீகரிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு, உலக நடுத்தர சந்தையில் நுழைந்தது. 250 தனியார் நிறுவனங்களில் 36 ஆவது இடத்தைப் பிடித்தது.

இங்கிலாந்தில் உள்ள ஆசிய சமூகத்தில் அதன் தாக்கத்திற்காக ஆசிய சாதனையாளர் விருதுகளில் சிறந்த ஒட்டுமொத்த நிறுவனத்திற்கான 'தங்க விருது' வழங்கப்பட்டது.

இவ்வாறாக பல உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகளை பெற்றுள்ள பிரபல தொழிலதிபர் அல்லிராஜா சுபாஸ்கரனுக்கு நேற்று விஷ்வ கீர்த்தி, ஸ்ரீ அபிமான, ஸ்ரீஜனரஞ்சன தேசாபிமான்ய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (05)

## ரிட்ஜ்வே வைத்தியசாலையில் 8 மாதக் குழந்தை உயிரிழப்பு

### பெற்றோர்க்குச் சந்தேகம்

கொழும்பு, ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த எட்டு மாத குழந்தையொன்று உயிரிழந்த விவகாரம் தொடர்பாக குழந்தையின் பெற்றோர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அவிசாவளை எபலபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் எட்டு மாதங்களான டொன் விதுநெத் எனும் குழந்தை சுகவீனம் காரணமாக கடந்த ஓகஸ்ட் 4 ஆம் திகதி அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக ஓகஸ்ட் 5 ஆம் திகதி கொழும்பு, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு குழந்தை மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குழந்தைக்கு நோய் இருப்பதை உறுதி செய்யாமல் யூகத்தின் அடிப்படையில் மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர் எனப் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

தீவிர சிகிச்சை பெற்று வந்த குழந்தை டொன் கடந்த 19 ஆம் திகதி உயிரிழந்தது.

குறித்த குழந்தைக்கு மருந்தொன்று வழங்கப்பட்டதன் பின்னர் நோய் தீவிரமடைந்து உயிரிழந்துள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

டொனின் உடல் திங்கட்கிழமை பிற்பகல் அவிசாவளையில் அமைந்துள்ள அவர்களது குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மருந்து ஒவ்வாமை காரணமாக குழந்தை உயிரிழந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய மறுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## ரத்வத்த தோட்ட சம்பவத்துக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் பின்னணி

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சாடுகிறார்

ரத்வத்த தோட்ட சம்பவத்தின் பின்னணியில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் உள்ளார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர் பாக அவர் மேலும் தெரிவித் ததாவது:

'இந்த சம்பவம் தொடர்பாக சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் நாமும் உறுதியாக உள்ளோம்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் எதிர்க்கட்சியின் ஓர் உறுப்பினர் உள்ளார் என்று தகவல் வந்துள்ளது.

எனவே, இது தொடர்பாக விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட அனைவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறான சம்பவங்கள் நாடளாவிய ரீதியாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இதனை வைத்து அரசியல் செய்ய முற்படக்கூடாது.

சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஜீவன் தொண்டமான் அங்கு சென்று நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஆனால், எதிர்க்கட்சியினர் இதனை அரசியலாக்க முற்படுகிறார்கள்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## வன்முறைக் கும்பல் ஒன்று சண்டிலிப்பாயில் அட்டகாசம்

### ஒருவர் காயம்;பொருள்கள் நாசம்

யாழ், சண்டிலிப்பாய் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத கும்பலொன்று நடத்திய தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளதோடு, வீட்டின் பொருள்களும் சேதமடைந்துள்ளன.

யாழ். மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் பகுதியில் உள்ள வீடு ஒன்று நால்வர் கொண்ட இனந்தெரியான கும்பலால் தாக்கப்பட்டுள்ளது.

முகத்தை கறுப்பு துணியால் கட்டி வந்த நால்வர், அத்துமீறி வீட்டினுள் பிரவேசித்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்ததுடன் குளிர்சாதன பெட்டி, தொலைக்காட்சி, சமையலறை உபகரணங்கள், தளவாடங்கள் என்பவற்றை அடித்து நொறுக்கி சேதம் விளைவித்துள்ளதோடு, இருமோட்டார் சைக்கிள்களையும் தீ வைத்து எரித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் தடயவியல் பொலிஸார் தடயங்களை ஆய்வுசெய்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் வீட்டிலிருந்த 20 வயது இளைஞன் ஒருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## அரச பொறிமுறையில் மாற்றம் வேண்டுமாம்

### வஜிர அபேவர்தன கூறுகிறார்

நாட்டில் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஆசியாவிலேயே மிகவும் வலுவான ஊழலுக்கு எதிரான சட்டத்தை நாடாளுமன்றத்தின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றி, அதை சட்டமாக உறுதிப்படுத்தி, தேசத்தின் முன்னேற்றத்துக்கான பாதையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து பணியாற்றும் இயலுமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்னும் தலைமையிடம் உள்ளது என்றும் அவரின் அனுபவங்களைத் தேசிய நலனுக்காக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார். ஜனாதிபதி ஊடகமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் வேண்டுமெனில் அரச பொறிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேபோல் நாடாளுமன்றத்தில் காணப்படும் அரசியல் ஒற்றுமையின்மை நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பதாகவும், அதனால் அரசியல்வாதிகளின் பலவீனமாக விளையாட்டுக்களை விடுத்து ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

## தப்போவ சரணாலய தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் வந்தது

தப்போவ சரணாலயம் 10 ஆம் கட்டைப்பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை பரவிய தீயால் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் காட்டுத்தீ பரவியுள்ளதாக கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அப்பகுதி மக்கள் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு தகவல் வழங்கியதையடுத்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து பாரிய சிரமத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையென்றும் குறித்த சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்தனர். (05)

## பாதசாரிக் கடவையைக் கடந்தவரை மோ. சைக்கிள் மோதித்தள்ளி விபத்து

### 54 வயது நபர் பரிதாபரமாக இறப்பு

களுத்துறையில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 54 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளே பாதசாரி கடவையில் வீதியைக் கடக்கும் போது குறித்த நபரை மோதியுள்ளது.

உயிரிழந்தவர் 54 வயதுடைய தல்கஸ்வல பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற முன்னாள் கடற்படை சிப்பாய் மற்றும் அவரது 17 வயது மகளும் விபத்தில் காயமடைந்து நாகொட போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் நாகொட போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## இதய நோயாளர்கள் குறித்து எச்சரிக்கை

இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் இதய நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாக இருதய நோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி நாளாந்தம் சுமார் 170 இதய நோயாளிகள் பதிவாகுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் கடந்த 10 வருட காலமாக மாரடைப்பால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இது தற்போது உட்கொள்ளும் உணவு முறைமை காரணமாகவே ஏற்படுகின்றது.

எனவே, தாம் உட்கொள்ளும் உணவு தொடர்பாக அதிக அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2023இல் வெளியிடப்பெற்றது.